# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 08 வியாழக்கிழமை 22.05.2025 கதிர் 202

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel


# ராஜபக்ஷக்களைச் சிறைக்கு அனுப்புவதால் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது!

## நாடாளுமன்றில் நாமல் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 22

“எம்மைச் சிறைக்கு அனுப்பினால் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது. எம் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாக தீர்த்துக் கொள்கின்றோம். ராஜபக்ஷக்களையும், கடந்த அரசுகளையும் விமர்சித்துக் கொண்டிருக்காமல் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்.” - என்று அநுர அரசிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே நாமல் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

“அரசு ஆட்சிக்கு வந்து 7 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு அரசு இதுவரையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உப்பு பிரச்சினைக்கு தீர்வு காணாதவர்கள் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியதே,

நாட்டு மக்கள் மரமுந்திரிகை சாப்பிடுவதைப் போன்று உப்பு சாப்பிடுவதில்லை என்று அரசு பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கின்றது. உணவின் அடிப்படைப் பொருளாகவே உப்பு காணப்படுகின்றது. ஆகவே, உப்பு உற்பத்தியில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணுங்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் “நானும் இராணுவ வீரன்” என்று குறிப்பிட்டுக் கொண்டு திரிந்தவர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளார்கள்.

இராணுவத்தில் சேவையாற்றிய பலர் இன்று ஆளும் தரப்பில் உள்ளார்கள். பலர் பதில் அமைச்சர்களாகவும் உள்ளார்கள். இராணுவ வீரர்களை வீரர்கள் என்று குறிப்பிடும் தற்றுணிபு இவர்களுக்குக் கிடையாது. தேர்தலுக்கு முன்னர் இராணுவ வீரர்களைச் சிப்பாய் என்று குறிப்பிடவில்லை.

அரசின் பலவீனம் மற்றும் குறைபாடுகளை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டும்போது அதனை அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் எதிர்க் கட்சியினர் இலக்கு வைக்கப்படுகின்றார்கள். எம்மைச் சிறைக்கு அனுப்பி அடிப்படை மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. எம் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஊடாகத் தீர்த்துக்கொள்கின்றோம்.

சமூகக் கட்டமைப்பில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷக்கள் காரணம், கடந்த அரசு காரணம் என்று ஆட்சிக்கு வந்தவுடன் குற்றஞ்சாட்டினீர்கள். இனியும் இந்தக்

7

## இரு நாட்களுக்கு முன்னர்

# முதலை இழுத்துச் சென்ற நபர் இன்று காலை சடலமாக மீட்பு!



மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் பாலம் மந்திரியாறு பகுதியில் முதலை இழுத்துச் சென்ற நபர் இரண்டு நாட்களின் பின் இன்று வியாழக்கிழமை சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம்

7

# ரி.வியில் ஐ.பி.எல். பார்த்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மயங்கி வீழ்ந்து மரணம்!



யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் இருந்து தொலைக்காட்சியில் ஐ.பி.எல். போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி

7

# எங்களுக்குத் தீர்வைத் தந்துவிட்டு நாட்டைத் தொடர்ந்து ஆளுங்கள்!



## அநுரவிடம் மனோ வேண்டுகோள்


கொழும்பு, மே 22

“ஆளுகின்ற அநுர அரசுக்குத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே, அவர்கள்தான் நாட்டைத் தொடர்ந்து ஆளப் போகின்றார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும்.” - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

7

# யாழில் பெற்றோரின் அனுமதியின்றி திருமணம் செய்த யுவதி கடத்தல்!

## தாக்குதலில் காயமடைந்த கணவன் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் - மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்குச் சென்று திரும்பிய இளம் தம்பதியினர் மீது கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டு, யுவதியைக் கடத்திச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் யுவதியின் கணவர் காயங்களுக்கு உள்ளான நிலையில், தெல்லிப்பளை

7

# நல்லூர் அசைவ உணவகத்தின் பெயர்ப் பலகை எதிர்ப்புக்களை அடுத்து அதிரடியாக அகற்றம்!




நல்லூர், மே 22

நல்லூர் ஆலய முன்றலில் யாழ். மாநகர சபையின் அனுமதியின்றி திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தின் பெயர்ப்பலகை மாநகர சபையினரால் அகற்றப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய முன்றலில் யாழ். மாநகர சபையிடம் அனுமதி பெறாது, அசைவ உணவகம் திறக்கப்பட்டுள்ள நிலையில், உணவகத்துக்கான அனுமதிகளைப்பெறுமாறு மாநகர சபை உணவகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், அனுமதி இன்றி உணவகத்துக்கு முன்பாக வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் பெயர்ப் பலகை மாநகர சபையினரால் இன்று வியாழக்கிழமை அகற்றப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் சில சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டமை தொடர்பில் மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமையும்

7

# இந்த ஆண்டு 555 மில்லியன் தேங்காய் அறுவடை எதிர்பார்ப்பு



கொழும்பு, மே .22

கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு மே மற்றும் ஜுன் மாதங்களில் தேங்காய் அறுவடையில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக லுனுவிலவில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 477 மில்லியன் தேங்காய்கள் அறுவடை செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டு 555 மில்லியன் தேங்காய்கள் அறுவடை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

தென்னை முக்கோண வலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு தேங்காயின் விலை சுமார் ரூ. 163 ஆக நிலையாக உள்ளது என்று தலைவர் மேலும் கூறினார. (ஐ)

# மே மாதத்திற்கான 'அஸ்வெசும' கொடுப்பனவு

கொழும்பு, மே .22

அஸ்வெசும பயனாளர்களின் மே மாதத்திற்கான கொடுப்பனவை இன்று வியாழக்கிழமை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்படுமென நலன்புரி சபை தெரிவித்துள்ளது.

அஸ்வேசும நலத்திட்ட பயனாளிகள் திட்டத்தின் கீழ் தகுதிப்பெற்றுள்ள சுமார் 14 இலட்சத்து 23 ஆயிரத்து 895 (1,423,895) குடும்பங்களுக்கென 11 ஆயிரத்து 274 மில்லியன் ((11,274,314,000.00) ரூபாய் நிதி வங்கி கணக்குகளில் வரவு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட பயனாளிகள் இன்று வியாழக்கிழமை (22) முதல் தங்கள் பயனாளி வங்கிக் கணக்குகள் மூலம் பயனாளிகள் உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென நலன்புரி சபை அறிவித் துள்ளது. (ஐ)



# மின் கட்டண திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்து கோரல் நடவடிக்கை நாளை முதல் ஆரம்பம்!

கொழும்பு, மே .22

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பாதிக்கான மின்சார கட்டண திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை நாளை (23) முதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி இந்த கருத்துக்கோரும் நடவடிக்கையானது அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் ஜுன் 3 ஆம் திகதி வரை பெறப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் 2025ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சார கட்டணங்களை திருத்துவது தொடர்பான முன்மொழிவை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் இலங்கை மின்சார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியாளர் தம்மிக விமலரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில், முன்மொழியப்பட்ட புதிய திருத்தத்தின் படி மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும் என்றாலும், இந்த வருடத்தின் தொடக்கத்தில் இருந்த மின்சாரக் கட்டணத்தை விட இது குறைவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2014–2022 காலகட்டத்தில் மின்சார உற்பத்தி பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்கான செலவுகள் அதிகரித்த போதிலும் மின்சார கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும், அந்தக் காலகட்டத்தில் எரிபொருள் விலைகள், நிலக்கரி, உதிரிப்பாகங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளும் தொடர்ந்து அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# வடக்கில் காணி சுவீகரிப்பு வர்த்தமானி வெள்ளியன்று பேச்சு



கொழும்பு, மே .22

வடக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் சுவீகரிப்பு தொடர்பில், மார்ச் மாதம் அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து எழுந்திருக்கும் பிணக்குகள் தொடர்பில், பாராளுமன்றத்தில், வெள்ளிக்கிழமை (23) அன்று முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கும்பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலே இந்த பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் (28.03.2025) திகதியிடப்பட்டு, 2,430 இலக்கமிடப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக திரும்பப் பெறுமாறு அரசை வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னையின் தலைவரும் எம்.பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு – கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை பாராளுமன்றத்தில் தனது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அழைப்பில் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் காணிகளை நிர்ணயம் செய்வதற்காக இலக்கம் 2430 மற்றும் (28.05.2025) திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அந்த மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணி நிர்ணயம் தொடர்பாக பிணக்குகள் எழுந்துள்ளன.

குறித்துக் கலந்துரையாடுவதற்காக 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை பாராளுமன்றத்தின் குழு அறை 01 இல் எனது தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு உங்களது பங்கேற்பினை மிகவும் கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன்" என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரைக் குடியேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மகிந்த மற்றும் ரணில் ஆகியோரை பார்த்த கோணத்தில் எங்களைப் பார்க்காதீர்கள், தேசிய நல்லிணக்கத்தை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். மக்களின் காணிகளை சுவீகரிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று உறுப்பினர்கள் எம்முடன் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில், நாங்கள் ஏன் வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் செயற்பட வேண்டும்,? இந்த வர்த்தமானி தொடர்பில் தமிழ் பிரதிநிதிகள் பல விடயங்களை முன்வைத்துள்ளார்கள்.

தமிழ் மக்களின் காணிகளில் பிறிதொரு தரப்பினரைக் குடியேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. காணி பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு 9 மாகாணங்களையும் வரையறுத்து இந்த வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமாகப் பிரசுரிக்கப்படவில்லை. காணி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் காணி அமைச்சு மற்றும் சுற்றாடல் துறை அமைச்சு ஒன்றிணைந்து கூட்டுப் பத்திரத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது எனக் கூறியுள்ளார். (ஐ)



## டலஸ் அழகப்பெரும – ஜூலி சங் இடையே சந்திப்பு

கொழும்பு, மே .22

சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் டலஸ் அழகப்பெருமவும், இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங்கும் புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் ஒரு சுமுகமான மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல், அமெரிக்காவின் புதிய நிர்வாகம், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடலில் கவனம் செலுத்தியதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"இலங்கை, அதன் கலாச்சாரம் மற்றும் மக்களுடன் ஜூலி சங் தொடர்ந்து கொண்டுள்ள உணர்ச்சிபூர்வமான ஈடுபாட்டிற்கு நன்றி" என்று டலஸ் மேலும் கூறினார்.

அமெரிக்க தூதர் ஜூலி சங்குடன் சேர்ந்து, அமெரிக்க தூதரகத்தின் அரசியல் செயலாளர் சாக் லோன்ஸையும் டலஸ் அழகப்பெரும சந்தித்தார்.

**7 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான**

## குஷ் போதைப்பொருளுடன் நால்வர் வசமாகச் சிக்கினர்

*கொழும்பு, மே 22*

*சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 7 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான 'குஷ்' போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நால்வர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*முதலில், கொழும்பு 02 பகுதியைச் சேர்ந்த 57 வயதான பெண் வியாபாரி ஒருவரை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தினர். பின்னர் விமான நிலைய கண்காணிப்பு கமராக்கள் மூலம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், சம்பவத்தில் தொடர்புடைய ஏனைய மூவர் அடையாளம் காணப்பட்டனர்.*

*நேற்று வியாழக்கிழமை இவ்வரசு கைது செய்யப்பட்டவர்கள், கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 45 வயதான ஒரு ஆண், அவரது 42 வயதான மனைவி மற்றும் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் ஆவார்.*

*தாய்லாந்தில் இவ்வகை போதைப்பொருட்கள் திறந்த சந்தையில் எளிதில் கிடைக்கின்ற நிலையில், சந்தேகநபர்கள் இந்தியாவின் பெங்களூரு வழியாக இலங்கைக்கு வந்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*அவர்கள் வைத்திருந்த பயணப்பொதிகளில் 7.150 கிலோ கிராம் 'குஷ்' போதைப்பொருள்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் குறித்த போதைப்பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக க்ட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

# கனேடியத் தூதுவருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ்/க்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப் பெறுமதி மிக்க செயல். அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்று சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கனேடியத் தூதுவரிடம் கடிதம் ஒன்றையும் சிறீதரன் எம்.பி. கையளித்துள்ளார்.

குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானிக்கும், பிரம்டன் நகர மேஜர் பற்றிக் பிரவுணுக்கும் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே நேற்று கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பியால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.



# பாகிஸ்தானுடன் வர்த்தகம், பேச்சுவார்த்தை இல்லை: பிரதமர் மோடி திட்டவட்டம்

''பாகிஸ்தானுடன் வர்த்தகமும் இல்லை. பேச்சுவார்த்தையும் இல்லை'' என பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், பிகானீர் மாவட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: இன்று, கர்ணி மாதாவின் ஆசிர்வாதம் பெற்ற பிறகு நான் இங்கு வந்துள்ளேன். இன்று, ரூ.26,000 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து உள்ளேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் மக்களை வாழ்த்துகிறேன்.

பாகிஸ்தானுக்கு நாம் பதிலடி கொடுத்து இருக்கிறோம். பாகிஸ்தானுடன் வர்த்தகமும் இல்லை. பேச்சுவார்த்தையும் இல்லை. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்து மட்டும் பேச்சுவார்த்தை இருக்கும். இந்தியாவுக்கு எதிரான நேரடி போரில் பாகிஸ்தானால் ஒரு போதும் வெற்றி பெற முடியாது. இந்தியாவுக்கு சொந்தமான தண்ணீரை பாகிஸ்தானால் பெறமுடியாது.

பாகிஸ்தான் 9 பயங்கரவாதி முகாம்களை வெறும் 22 நிமிடத்தில் அழித்து இருக்கிறோம். நமது முப்படைகளின் சக்கரவியூகத்தால் பாகிஸ்தான் மண்டியிட்டுள்ளது. இந்தியர்களின் ரத்தத்துடன் விளையாடுவதற்கு பாகிஸ்தான் பெரும் விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும். ஒவ்வொரு பயங்கரவாதத் தாக்குதலுக்கும் இந்திய பாதுகாப்பு படையினர் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை நிரூபித்துள்ளோம்.

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா பயப்படப் போவதில்லை. பாகிஸ்தானின் ரஹீம் யார் கான் விமானப்படைத் தளம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பிறகு, ஒவ்வொரு இந்தியரும் ஒரே குரலில் ஒன்றுபட்டு, பயங்கரவாதத்தை ஒழிக்கவும் கற்பனைக்கு அப்பாற்பட்ட தண்டனையை உறுதி செய்யவும் தீர்மானித்தனர்.



இந்திய ஆயுதப்படைகளின் துணிச்சலால்தான் இன்று நாம் வலுவாக நிற்கிறோம். எங்கள் அரசாங்கம் மூன்று படைகளுக்கும் சுதந்திரக் கரம் கொடுத்தது. மேலும் ஒன்றாக, முப்படைகளும் இணைந்து தாக்குதல் நடத்தும் உத்தியை வகுத்தன. அது பாகிஸ்தான் சரண் அடைய வழி வகுத்தது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.(ஐ)



## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அதிநவீன தொழில்நுட்ப பாதுகாப்பு

உலகப்புகழ்பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோவிலில் டிரோன் தடுப்பு மற்றும் ஏ.ஐ., உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள திருப்பதி தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

உலகளவில் பிரசித்தி பெற்ற ஏழுமலையான் கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வது வழக்கம். எனவே, இங்கு எப்போதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இருப்பினும், அவ்வப்போது, தடையை மீறி டிரோன்களை பறக்கவிடும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

கடந்த ஆண்டு ஹரியானாவைச் சேர்ந்த தம்பதி ஒன்று, திருமலை சாலையில் டிரோனை பறக்கவிட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், திருமலையில் அதிநவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் பாதுகாப்பை பலப்படுத்தவும், பக்தர்களின் வசதிக்காக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தவும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து தேவஸ்தான நிர்வாக அதிகாரி ஷியாமலா ராவ் கூறியதாவது: கோவிலில் பக்தர்களின் தரிசன வசதியை எளிமையாக்குதல், ஆள்மாறாட்டம் மற்றும் மோசடி வேலைகளை தடுப்பது, தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை சுலபமாக்க, ஏ.ஐ., உள்பட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்த கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அதுமட்டுமில்லாமல், தடையை மீறி பறக்கவிடப்படும் டிரோன்களை கண்டறிந்து தாக்கி அழிக்கும் யு.ஏ.வி., சாதனங்களையும் கோவில் வளாகத்தை சுற்றி பறக்கவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்,, தடையை மீறி போட்டோ எடுப்பது உள்ளிட்ட விதிமீறல்கள் முறியடிக்கப்படும்.

அதேபோல, கோவிலுக்கு வரும் பக்தர்களின் அடையாளத்தை உடனடியாக சரிபார்க்க முக அங்கீகாரம்(கயஉயைட சுஉ ழுபவைைழை) தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம், பக்தர்களின் செயல்பாடுகளை கண்காணிக்க முடியும், இவ்வாறு தெரிவித்தார்.(ஐ)

## நாடு முழுவதும் புதுப்பித்த 103 ரயில் நிலையங்களை திறந்தார் பிரதமர் மோடி!



'அம்ரித் பாரத்' திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக புதுப்பிக்கப்பட்ட 103 ரயில் நிலையங்களை, இன்று (மே 22) பிரதமர் மோடி, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக திறந்து வைத்தார்.

ரயில்வேயில், 'அம்ரித்பாரத்' திட்டத்தின்கீழ், 508 ரயில்நிலையங்களை, 24,470 கோடி ரூபாயில் மேம்படுத்தும் பணிகள் ஓராண்டாக நடந்து வருகின்றன. தெற்கு ரயில்வேயில், 40க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுகின்றன.

நாடு முழுதும் பணிகள் நிறைவடைந்த 103 ரயில் நிலையங்களை, பிரதமர் மோடி டில்லியில் இருந்து, 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக இன்று திறந்து வைத்தார். ராஜஸ்தான் மாநிலம், பிகானீர் மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையத்தில், பிகானீர்–மும்பை விரைவு ரயிலை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதன்படி, தெற்கு ரயில்வேயில், சென்னை பரங்கி மலை, சிதம்பரம், மன்னார்குடி, ஸ்ரீரங்கம், விருத்தாசலம், திருவண்ணாமலை, போளூர், கிருஷ்ணகிரி மாவட்டம் சாமல்பட்டி ஆகிய 9 ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டன. இன்று திறக்கப்பட்ட ரயில் நிலையங்களில், லிப்ட், நடை மேம்பாலம், கூடுதல் நடைமேடை, பயணியர் காத்திருப்பு அறைகள், நுழைவாயில்கள் சீரமைப்பு, எஸ்கலேட்டர்கள், மல்டி லெவல் பார்க்கிங், 'சிசிடிவி' கேமரா உள்ளிட்ட வசதிகள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நிர்மலாவுடன் கனிமொழி சந்திப்பு

புதுடில்லியில், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை, தி.மு.க., – எம்.பி., கனிமொழி சந்தித்தார்.

'செங்கல் மீதான ஜி.எஸ்.டி., வரியை குறைக்க வேண்டும்' என வலியுறுத்தி, தி.மு.க., – எம்.பி., கனிமொழி, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். (ஐ)



# உங்கள் வீட்டில் கண்ணாடி இருக்கிறதா?

**–பிருந்தா சேது**

‘அம்மாவும் அப்பாவும் தன் குழந்தைக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருப்பார்கள் ஆனால், அந்தக் குழந்தை என்ன கேட்கிறதோ அதைத் தர மாட்டார்கள்.’ சமீபத்தில் படித்த மீம்ஸ் இது. எத்தனை உண்மை. இந்த வாழ்க்கை ஒரே ஒரு முறைதான். அந்த வாழ்க்கையைத் தனக்குப் பிடித்த விதமாக வாழத்தானே ஒவ்வொருவரும் விரும்புவார்கள். குழந்தைகள் உட்பட. அதை அவர்களுக்கு அளிப்பதுதானே பெற்றோர் தரும் மிகச் சிறந்த பரிசு.

பிடித்த படிப்பு, பிடித்த வேலை, பிடித்த இணையர் இவை அமைந்துவிட்டால், வேறெதுவுமே இந்த வாழ்வில் குறையாகத் தெரியாது. இவை அமையாமல், மொத்த உலகமே கிடைத்தால்கூட அது மகிழ்வில்லை. இல்லையா?!

சின்னச் சின்ன அடம்பிடித்தல்களை எவ்வாறு பிள்ளைகளிடம் ‘ஹேண்டில்’ பண்ணுகிறோமோ, அதைப்போலத்தான் பெரிய விஷயங்களையும் நம்பிக்கையுடன் மன உறுதியுடன் எளிமையாகச் செய்ய வேண்டும்.

எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவர் தன் 5 வயது குழந்தை தன்னிடம் ‘அம்மா ஏன் பௌடர் போடுறீங்க ’ என்று கேட்டதற்காக, இருபது வருடங்களாகத் தான் பௌடரோ கண் மையோ போடுவதில்லை என்றார். இதிலென்ன பெருமை? அந்தச் சின்னஞ்சிறிய மகளுக்கும் குற்றவுணர்வை வரவழைத்து, தான் பௌடர் போட்டுக்கொள்ளும் மகிழ்வையும் இழந்து இது என்ன வகையிலான பெருங்கொடுமை?

ஏன் பௌடர் போடுகிறாய் என்று கேட்டால், எது காரணமோ அதைச் சொல்லிவிட்டுப் போனால் மிக எளிமையாகக் கடந்திருக்க வேண்டிய தருணம் இது. ஆனால், அதை எவ்வளவு வன்மையானதாக ஆக்குகிறோம் என்பது நமது கைகளில்தான் இருக்கிறது. இதே போலத்தான் செக்ஸ் பற்றிய, ஆண் பெண் உறவுகள் பற்றிய கேள்விகளுக்கும் ஏதோ மிக அப்பட்டமாகப் பதில் சொல்ல வேண்டும் என்று நாமாக நினைத்துக்கொள்கிறோம். இது நமது அதிக அறிதலால் ஏற்பட்ட விளைவு. குழந்தைகளின் அறியாமையை, அப்பாவித்தனத்தை, வெகுளித் தனத்தைப் புரியாமல், நம் அறிவிலிருந்து விஷயத்தைப் புரிந்துகொண்டு விளக்குவது என்பது தேவையே இல்லை. அறிந்த முழுவதையும் கொட்ட வேண்டும் என்கிற அவசியமில்லை.

குழந்தைகளுடன் மனப்புரிதலுடன் உறவாடும் அறிவைப் பெற்றவுடன் இது தானாக அமைந்துவிடும். ஒவ்வோர் அம்மா, அப்பா, மகன், மகள்களோடும் அவரவருக்கான புரிதலுணர்வு அமைந்திருக்கும். அதன் வழியே சென்றால்தான் அவரவர் அவரவருக்கான உறவின் வெளியை அடையமுடியும்.

இந்தக் கட்டுரைகள், சொல்லிக்கொடுத்தல்கள் எல்லாமே, ஒருவித வினையூக்கிபோல. இவற்றை நீங்கள் பயன்படுத்தலாம் ஆனால், இவையே உணவல்ல. இவை உங்களின் உணவை உண்டாக்கப் பயன்படும் கரண்டிகள் அவ்வளவே. உணவின் அனைத்தும் நீங்கள்தான். செய்யவும், பரிமாறவும் மட்டுமே கரண்டிகள். இதை உணர்ந்தால், உங்களுணவை நீங்களே, உங்களுக்குப் பிடித்தமான, சரியான விதத்தில் செய்துகொள்ள முடியும்.

எப்படி இந்தக் கட்டுரைகள் உங்களுக்கோ, அப்படித்தான் நீங்கள் உங்களது மகன், மகள்களுக்கு என்பதைப் புரிந்து கொண்டால், அவர்களது வாழ்வில் எந்தளவு உங்களது தலையீடு இருக்கலாம், இருக்கக் கூடாது என்பதையும் உணர்வீர்கள்.

உங்களின் பதின்பருவ மகளோ மகனோ ‘செக்ஸ்’ வீடியோஸ் பார்த்துக்கொண்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? எப்படி எதிர்கொள்வீர்கள்?

**பதின் பருவம்**

குழந்தைகளுக்கு முதல் மூன்று வருடங்களில் ஏற்படும் அதே அறிதலுணர்வு, என்னுடல் ஏன் இப்படி இருக்கிறது, பிறருடையது ஏன் அப்படி இருக்கிறது, இந்த அமைப்புடைய உடலுக்கு இதுதான் பெயரா, நான் யார் ஆணா, பெண்ணா, டோம்போயா (Tomboy பெண்களில் ஆண் போன்ற கம்பீரத்தன்மைகளுடன் இருப்பவர்), எஃபமினேட்டா



(Effeminate ஆண்களில் பெண் போன்ற நளினத் தன்மைகளுடன் இருப்பவர்), திருநரா, பால்புதுமையினரா போன்ற பல கேள்விகள், மரணம், சாவு பற்றிய மனக்குழப்பங்கள், பயங்கள், சந்தேகங்கள் பதின்பருவத்தில் இருக்கும்.

இதே போன்ற தன்னைப் பற்றிய, தன்னுடலைப் பற்றிய அறிதல்களும் புரிதல்களும் உணர்தல்களும் நாற்பதுகளில் இரண்டாம் பதின்பருவத்தில் ஏற்படுகிறது. அதுவே மறுபடியும் எழுபதுகளிலும் மூன்றாம் பதின் பருவத்தில் ஏற்படும்.

**முதல் பதின்பருவம்:**

குழந்தைகள் தாங்கள் யாரோ, அவர்களாக அவர்கள் உருவாகிற காலம் இது. பதின்பருவத்தில் எதிர் பாலினத்தவரிடம் ஈர்ப்பு ஏற்படுவது இயல்பு. காதல், காமம் பற்றிய புதிர்மையான கனவுகளுடன் கேள்விகளைப் பிள்ளைகள் கேட்பது நலம். கேள்விகளைக் கேட்பதற்கான வெளியைப் பெரியவர்கள் தந்திருக்க வேண்டும்.

பிள்ளைகளின் யதார்த்தமான கேள்விகளுக்கு, சீரியஸாக பதில் சொல்லி, சீரியஸான கேள்விகளுக்கு மொக்கையாகப் பதில் சொல்லி பல்பு வாங்குவது என்பது எல்லாம் அடிக்கடி நடக்கும்.

வெளியே போயிருந்தால் அவர்கள் தங்களுடைய நண்பர்களுடன் பேசிவிட்டு, வீட்டுக்கு புறப்பட மனம் வராது 1 அலாரம், 2 வது அலாரம், 3 வது அலாரம் கொடுத்துக் கூப்பிடுவது நல்லது. திடீரெனக் கிளம்புவது, ‘ஆ’ காட்டு என்று வாயில் போடுவது, இந்த ட்ரெஸ் எடு என வற்புறுத்துவது கூடவே கூடாது. அவர்களுக்கு என்று ஒரு தனித்துவத்துடன் அவர்களாக உருவாகிற தருணங்கள் இவை. அவர்களுடைய தேர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். நமது சீனியாரிட்டியைத் திணிக்கக் கூடாது.

ஃப்ரெண்ட்லியாக இருப்பது வேறு ஃப்ரெண்டாக இருப்பது வேறு. தன்னிடம் பிள்ளைகள் எது பற்றியும் பகிரும்படியான நட்புறவுடன் பெற்றோர் இருக்க வேண்டும். அவர்களுக்கென்று ரகசியம் இருப்பதை மதிக்க வேண்டும். அவர்களுக்கான அறை என்பது கண்டிப்பாக வேண்டும். அறை எனத் தனியே தர முடியாதவர்கள் அவர்களுக்கென ஒரு பீரோவோ அல்லது மேசையோ கொடுத்திருக்க வேண்டும்.

ஐன்ஸ்டைனுடைய பிரபலமான வாசகம் ஒன்று உண்டு. **“If you want your children to be intelligent read them fairy tales. If you want them to be more intelligent> read them more fairy tales.” Albert Einstein**

எட்டு, ஒன்பது வயதில்“சந-வுநநடெ தொடங்குகிறது. சாதாரணமாகவே பிள்ளைகள் ஏன் கோபித்துக்கொள்கிறார்கள்



எதற்குச் சிடுசிடுக்கிறார்கள் என்பது புரியாது. இந்தக் காலகட்டத்தில் இன்னும் புரியாமல் விதவிதமாக நடந்துகொள்வார்கள்.

ப்ரீ டீனிலும் சரி, பதின் பருவத்திலும் சரி, பிள்ளைகளுக்கு நிறையக் கோபம் வரும் தான் நினைத்த வேகத்தில் இல்லாமல், இந்த உலகம் மிக மெதுவாகச் சுழலுவதாகத் தோன்றும் எதெடுத்தாலும் அடம்பிடிப்பார்கள் கத்துவார்கள் நிறைய உணர்ச்சிவசப்படுவார்கள் அறிவுரை சொன்னால் பிடிக்கவே பிடிக்காது (யாருக்குத்தான் பிடிக்கும்?). கட்டளையாக எதையும் சொல்லிவிடக் கூடாது. அவ்வளவுதான், முடிந்தது. நான்கைந்து வயதுப் பிள்ளைகள் போலத் தவறுகள் நிறையச் செய்து செய்து கற்றுக்கொள்வார்கள். அப்போது நாம் இதமாகப் பதமாகச் சொல்லிக் கூட்டிவர வேண்டும். ஆனால், நாமோ நமது இரண்டாவது பதின் பருவத்தில் இருப்போம்.

பிள்ளைகள், தன்னைப் பெரியாளாக நினைத்துக்கொள்வார்கள். அவர்களின் அந்தப் பிம்பத்தை, நாம் உடைத்துவிடக் கூடாது. சிறுபிள்ளைத்தனமாக நிறையச் செய்வார்கள். அதை நாம் பெரிதுபடுத்தக் கூடாது. மறந்தது போல விட்டுவிட வேண்டும். யாரிடமும் அதைப் பற்றி, சாதாரணமாக்கூடச் சொல்லிவிடக் கூடாது.

இரண்டு வயதுக் குழந்தை கையில் கத்தி. அதை எப்படி வாங்குவது என்று ஒரு கதை உண்டு. சிம்பிள் லோஜிக் என்னவென்றால், அதற்குப் பிடித்த ஒரு பொம்மையைக் கொடுத்தால், அல்லது வேறு விளையாட்டுகளில் கவனம் திருப்ப வைத்தால், தானாகக் கத்தியைக் கீழே வைத்துவிட்டு, மற்றதில் கவனம் வைக்கும் என்று. குழந்தைகள் சைக்காலஜி மட்டுமல்லாமல் மொத்த மனித சைக்கலாஜிக்குமே இதைச் சொல்லலாம். நெகட்டிவ்வானவற்றை நீக்க வேண்டுமெனில், போஸ ிட்டிவ்வான நல்ல விஷயங்களை அதிகப்படுத்துவது.

எது பிரச்சினையோ அதைப் பேசவே கூடாது. என்ன ‘ரிசல்ட்’ வேண்டுமோ அதை நோக்கிச் செல்வது.

தோழியின் மகள் கராத்தே வகுப்பிற்குப் போகும்போது, (5 வயதில் போட்டு அமுக்கிதான் சேர்த்துவிட்டார்கள்). பதினோரு வயதில் ப்ளாக் பெல்ட் தேர்வு 18 தினங்கள். அதற்குப் போகும் முன்பே, தன்னால் எதுவும் முடியாது தேர்வுக்குச் செல்ல மாட்டேன் என்று ஏக ரகளை.

தோழி, ‘நாங்க இந்த டிவிலருந்து வர்றம், அந்த டிவிலருந்து வர்றம். எப்படி நீங்க சின்ன வயசிலயே இதெல்லாம் சாதிச்சீங்க’ என்று பேட்டி எடுப்பதுபோல விளையாடுவார். அதில் அம்மா, அப்பா பற்றிய கேள்விகளும் வரும். உணவு மற்ற மேனர்ஸ் போன்றவையும் வரும். அப்படி இப்போது மகள் கலெக்டர் ஆகிவிட்டார். அதைப் பேட்டி எடுப்பது. ‘உங்களால எப்படி கலெக்டர் ஆக முடிஞ்சது. அதுக்கு என்னல்லாம் செய்தீங்க. ஒ ஒன்பது வயசிலயே கராத்தே கத்துகிட்டீங்களா, சின்னப் பிள்ளைகளுக்கு உங்க அட்வைஸ் என்ன’ இப்படிஇப்படி எல்லாம் தாஜா செய்து, ப்ளாக் பெல்ட் தேர்வுக்கு அனுப்பி, வெற்றியடையச் செய்துவிட்டார்.

இதெல்லாம் கொஞ்சம் கிறுக்குத் தனமாகத் தோன்றும். ஆனால், இது வேண்டும் நிறைய வேண்டும்.

ஒரு கதை. ஒரு குழந்தை தான் டான்ஸராக வேண்டும் என நினைக்கிறது அடுத்து கிடாரிஸ்ட் ஆக வேண்டும் என்று, அடுத்து ட்ரைவர் ஆக வேண்டுமென, அப்புறம் ஓட்டப்பந்தய வீரராக வேண்டுமென இப்படியே நீளும். கடைசியில் இவை எதுவுமே சம்பந்தப்படாமல் ஆனால், மகிழ்வாக ஒன்றைச் செய்வதாக முடியும். இந்த உலகத்தில் எதுவும் ஆகித்தான் தீர வேண்டும் என்பது இல்லை. மனநிறைவும் மகிழ்ச்சியும்தான் எப்போதும் முக்கியம்.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் பாகிஸ்தான்: உலக சுகாதார அமைப்பில் இந்திய தூதர் கண்டனம்!





பாகிஸ்தானை கடுமையாக சாடிய இந்திய தூதர் அனுபமா சிங், 'பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது,' என்று குற்றம் சாட்டி உள்ளார்.

உலக சுகாதார அமைப்பில் பாகிஸ்தானுக்கு இந்தியா கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. ஜெனீவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் இந்திய தூதர் அனுபமா சிங் பேசியதாவது: பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது. பயங்கரவாதத்தின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் மண்ணிலிருந்து செயல்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற திட்டத்தைத் தொடங்கியது. இதன்படி பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் முகாம்கள் தாக்கப்பட்டன. பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தாமல் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். பாகிஸ்தானால் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் மற்றும் அவர்களின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினோம்.

சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக தவறான தகவலை பாகிஸ்தான் பரப்புகிறது. இவ்வாறு அவர் பேசினார். இந்திய தூதர் அனுபமா சிங் பேசிய வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. (ஐ)

# இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை



அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டு தூதரகத்தில், பயங்கரவாதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இஸ்ரேல் தூதரகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் இஸ்ரேல் நாட்டு தூதரகம் அமைந்துள்ளது. இங்கு திடீரனெ இன்று (மே 22) பயங்கரவாதி துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் இஸ்ரேல் தூதரகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இவரது விபரங்களை வெளியிட அதிகாரிகள் மறுப்பு தெரிவித்து விட்டனர். இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

துப்பாக்கிச்சூட்டில் ஒரு ஆண், ஒரு பெண் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை கைது செய்த போது, ''பாலிஸ்தீனத்தை விடுதலை செய்ய வேண்டும்'' கோஷம் எழுப்பினார். அவரிடம் விசாரணை நடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலிய தூதர் டேனி டானன் கூறியதாவது: யூத சமூகத்திற்கு தீங்கு விளைவிப்பது எல்லை மீறி உள்ளது. இந்த மோசமான குற்றவாளியை நாங்கள் நீதியின் முன் நிறுத்துவோம் என்று திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார்.

அமெரிக்காவில், இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு, அதிபர் டிரம்ப் வருத்தம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

யூத எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்ட இந்த கொடூரமான கொலைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். வெறுப்புக்கும், பயங்கரவாதத்திற்கும் அமெரிக்காவில் இடமில்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல்கள் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த கொலை சம்பவத்தை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவுடன் மோதலா? இல்லை என்கிறார் இஸ்ரேல் பிரதமர்



அமெரிக்காவுடன் இஸ்ரேலுக்கு மோதல் போக்கு ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுப்பு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக மீண்டும் தேர்வான டிரம்ப், முதல் வெளிநாட்டுப் பயணமாக வளைகுடா நாடுகளுக்கு சென்றார். இந்தப் பயணத்தின் போது பல ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இதில், கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், டிரம்ப்பின் இந்தப் பயணத்தின் போது, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலுக்கு மட்டும் செல்லவில்லை.

இதனால், அமெரிக்காவுடன் இஸ்ரேலுக்கு மோதல் ஏற்பட்டதே, டிரம்ப் அந்நாட்டுக்கு செல்லாததற்கு காரணம் என்று செய்திகள் உலா வந்தன. இந்நிலையில், அமெரிக்கா, இஸ்ரேல் இடையே மோதல் போக்கு உள்ளதாக வெளியான தகவலுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: 10 நாட்களுக்கு முன்பு அமெரிக்க அதிபர் டிரம்ப்புடன் பேசினேன். அப்போது, உங்களுக்கும், இஸ்ரேல் நாட்டுக்கும் என்னுடைய முழு ஆதரவு உள்ளது என்று கூறினார். இவ்வாறு தெரிவித்தார். (ஐ)

# அரிசி சர்ச்சையில் சிக்கிய ஜப்பான் விவசாய அமைச்சர் ராஜினாமா



அரிசி குறித்து சர்ச்சையாக பேசிய விவகாரத்தில் ஜப்பான் நாட்டின் விவசாய அமைச்சர் டகு எட்டோ ராஜினாமா செய்தார்.

ஜப்பான் அமைச்சரவையில் விவசாய அமைச்சராக இருப்பவர் டகு எட்டோ. ஜப்பானின் பிரதான உணவான அரிசியின் விலை, இந்த ஆண்டு கடுமையாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அவசரகால இருப்புக்களை விடுவித்தல் மற்றும் வெளிநாட்டு அரிசியை இறக்குமதி செய்தல் போன்ற நடவடிக்கைகளை ஜப்பான் அரசு எடுத்து வருகிறது.

இந்நிலையில் டகு எட்டோ, அரிசிக்கு ஒருபோதும் பணம் செலுத்தக்கூடாது. நானேஒருபோதும்அரிசிவாங்கியதில்லை. வெளிப்படையாகச் சொன்னால், என் ஆதரவாளர்கள் எனக்கு நிறைய அரிசி தருகிறார்கள். என் வீட்டில் இவ்வளவு அரிசி இருப்பதால் அதை விற்க முடியும் என்று பேசி பொதுமக்களின் கோபத்திற்கு ஆளானார்.

இவ்வாறு அவர் சர்ச்சைக்குரிய வகையில் பேசியது ஜப்பான் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது. தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னதாக, பிரதமர் ஷிகெரு இஷிபாவின் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

அதைதொடர்ந்து அவர் தனது அமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்தார்.

ராஜினாமா குறித்து டகு எட்டோ கூறியதாவது:

இந்தப் பணிக்கு தான் சரியான நபர் அல்ல என்று முடிவு செய்து, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தேன். அரிசியை சொந்தமாக வாங்கியதை தெளிவுபடுத்தி உள்ளேன். நான் பேசிய கருத்துகளால் பொதுமக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளானார்கள். நான் அவ்வாறு பேசியதற்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு டகு எட்டோ கூறினார். ((ஐ)

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிடத்தக்கது. அதேவேளை, நல்லூர் ஆலயச் சூழலில் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் குறித்த உணவகத்தை அகற்றக் கோரி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், நேற்று புதன்கிழமை மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதியை மீட்கப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த யுவதியும், பூநகரி பகுதியைச் சேர்ந்த இளைஞரும் காதலித்து வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்தனர்.

இந்நிலையில், யுவதியின் பெற்றோர், தமது பிள்ளையைக் காணவில்லை என்று தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, அந்த யுவதி திருமணம் செய்து வாழ்ந்து வருவது தெரியவந்தது.

அதனையடுத்து அந்த யுவதியையும், அவரது கணவரையும் பொலிஸ் நிலையம் அழைத்துப் பெற்றோரின் முறைப்பாட்டை முடிவுறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

அதற்கு யுவதியின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்

குறித்த வழக்கு விசாரணைக்காக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்துக்கு நேற்று யுவதியும் அவரது கணவரும் வந்த பின்னர், இருவரும் நீதிமன்றை விட்டு வெளியே வந்த நிலையில், நீதிமன்றத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் காத்திருந்த யுவதியின் சகோதரன் அடங்கிய கும்பல், யுவதியின் கணவன் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு யுவதி மீதும் தாக்குதலை மேற்கொண்ட பின்னர், யுவதியை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், கடத்திச் செல்லப்பட்ட யுவதியை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ரி.வியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீழ்ந்து உயிரிழந்துள்ளார். சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த பரமானந்தம் கோவிந் (வயது 26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு உணவருந்திவிட்டு தொலைக்காட்சியில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த வேளை திடீரென நெஞ்சு வலிப்பதாக கூறிய நிலையில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அதனையடுத்து அவரை வீட்டார் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இருதய அறைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டமையால் மரணம் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

## எங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதாரச் சவால்கள் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

"ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பல பிரபல ஆடை தொழில் முனைவர்கள் சத்தமில்லாமல் தம் தொழிற்சாலைகளை அயல் நாடுகளுக்குக் கொண்டு போகின்றார்கள். வேலை இழப்பு. உள்நாட்டில் பணப்புழக்கம் குறைகின்றது. நாளை மின்சார விலை உயர்வு வருது. ஆனால், 2024 ஆம் ஆண்டு இலாபம் காட்டிய மின்சார சபை இன்று எப்படி ஆறு மாதத்தில் நட்டம் என்று கேட்டால் பதில் சொல்ல ஆளில்லை.

2024ஆம் ஆண்டு 5 சதவீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி, இந்த வருடம் 3.5 சதவீதமாக இருக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியும், 3.4 சதவீதம் என உலக வங்கியும் கூறுது.

அடுத்த வருடம், இது 3.2 சதவீதமாகக் குறையலாம் என அதே ஆசிய அபிவிருத்தி வங்கி கூறுகின்றது.

இதில் 2028ஆம் ஆண்டில் இருந்து வெளிநாட்டுக் கடன் தவணைகள் கட்டனும். இவை எதற்கும் அரசிடம் தீர்க்கமான தீர்வுகள் இல்லை. இனி ஒரு நெருக்கடி வருகின்றதா? வந்தால் நாடு தாங்குமா?

முதல் சம்பவம், தைத்த ஆடை ஏற்றுமதி துறை சார் ஆடைத் தொழிற்சாலை ஒன்று ஆயிரத்து நானூற்றுக்கு அதிகமான தொழிலாளரை விலத்தி விட்டார்கள். ஏற்கனவே பல பிரபல ஆடைத் தொழில் முனைவர்கள் சத்தம் இல்லாமல் தம் தொழிற்சாலைகளை இந்தியாவுக்கும், வியட்நாமுக்கும் கொண்டு போகிறார்கள்.

ட்ரம்ப் வரி விவகாரத்தின் பிரதிபலிப்பு இதுவாகும். அது இன்னமும் முடிவுக்கு வரவில்லை. "ட்ரம்ப் நிர்வாகத்துடன் நாம் பேசி விட்டோம். இதோ, ஸ்ரீலங்காகா-யூஎஸ் கூட்டு அறிக்கை வருகிறது" என அநுரவே சொன்னார். ஆனால், "அதெல்லாம் இல்லை. நூற்றுக்கணக்கான நாடுகளுடன் ஒவ்வொன்றாகக் கூட்டு அறிக்கை வெளியிட முடியாது. இலங்கை அரசின் விளக்கம் பிழை," என நான் கேட்ட போது யூஎஸ் தரப்பில் இருந்து விளக்கம் தந்தார்கள்.

இன்று வெளிநாட்டில் கடன் வாங்க முடியாத, இலங்கை அரசு, என்ன செய்கின்றது? பண வீக்கம் கூடும் என்பதால், ஐ.எம்.எப். நிபந்தனை காரணமாக பணத்தாள் அச்சடிக்கவும் முடியாது. இந்நிலையில், 2024 செப்டெம்பர் முதல் டிசம்பர் வரைக்குள் மட்டும் உள்நாட்டுக் கடனாக திறைசேரி உண்டியல்கள் விற்று ரூ: 44,000 கோடி கடன் வாங்கி அரச ஊழியர் சம்பளம் மற்றும் செலவுகளை சமாளிக கின்றது.

வெளிநாட்டில் இருந்து இந்தியா, சர்வதேச நாணய நிதி, உலக வங்கி போன்றவை தரும் நன்கொடை, குறை வட்டி அல்லது வட்டியில்லா கடன்கள் மட்டுமே.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகின்றது. சந்தடி அடங்க, உண்மைப் பிரச்சினைகள் மேலே எழுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லாத அரசு, அதே பழைய எதிர்க்கட்சி கால அரசியல் செய்து, அரச செலவுகளை குறைக்கின்றோம், திருடர்களைப் பிடிக்கின்றோம் என்று சொல்லி, சொல்லியே காலத்தை ஓட்டுகின்றது.

செலவுகளைக் குறைப்பது, திருடர்களைப் பிடிப்பது நல்ல விடயம்தான். நாம் ஆதரவளிக்கின்றோம். ஆனால், அது மட்டும் அரசு அல்ல என்று சொன்னால் இவர்களுக்கு விளங்குவது இல்லை.

ஜனாதிபதித் தேர்தல், இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றில் பெறுபேறு எப்படி இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுகின்ற அநுர அரசுக்குத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. ஆகவே, அவர்கள்தான் நாட்டைத் தொடர்ந்து ஆளப் போகின்றார்கள். ஆளவும் வேண்டும். ஆனால், பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருவிழா முடிவுக்கு வருகின்றது. சந்தடி அடங்க, உண்மை பிரச்சினைகள் மேலே எழுகின்றன. இனி கட்சி அரசியல் சண்டைகளை நிறுத்தி விட்டு அரசும், எதிர்க்கட்சிகளும் இவற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும்." - என்றார்.

## முதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவ்வாய்க்கிழமை மந்திரியாறு நீரோடைப் பகுதியில் இந்த நபர் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோதே முதலையால் இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் சுங்கான்கேணி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஆவார்.

முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட இந்த நபரை கடந்த இரு நாட்களாக உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் தேடி வந்த நிலையில், இன்று காலை அவர், இடுப்புக்கு கீழ்ப் பகுதியற்ற நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 100 கிலோ ஹெரோயினுடன் கைது!

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 100 கிலோகிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

101.47 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் தொகையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

## ராஜபக்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றச்சாட்டு செல்வாக்கு செலுத்தாது. ஏனெனில் 6 மாதங்கள் கடந்து விட்டன. ஆகவே, போலியாக விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துக் கொண்டிருக்காமல் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்." - என்றார்.

# உங்கள் வீட்டில் கண்ணாடி...

பிள்ளைகளுக்குத் தன்னுடைய உள்ளுணர்வைப் பின்பற்றத் தெரிந்தால் போதுமானது அதைப் பெற்றோர் ஆமோதித்து வளர்த்தாலே போதுமானது.

சில பிள்ளைகள் எதையும் தான் செய்து பார்த்து, முயற்சி செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு எடுத்தவுடனே நேர்த்தியாக செய்ய வேண்டும் என்று நினைத்து, நினைத்து எதையும் செய்து பார்க்க மாட்டார்கள். அப்புறம் யாரும் விமர்சித்துவிடுவார்களோ என்கிற பயம். ஆனால், மனதுள் எல்லாவற்றையுமே நிறைய முறை செய்வார்கள். இவர்களின் தயக்கத்தைப் போக்க, ஒரு பெரிய செயலை, சின்னச் சின்னதாக உடைத்துக் கொடுக்க வேண்டும்.

பத்து வருடம் கழித்து ஓவியராக வேண்டும் என்றால், ஒன்பது வருடங்களில் என்னவாக இருக்க வேண்டும், 7இல், 5இல், இப்ப என்று (முன்னோக்கிப் போய்) பின்னோக்கிக் கூட்டிவந்து நிற்க வேண்டும். அவர்களைத்தான் ஆக நினைக்கும் மொத்த கனத்துடன் யோசிக்க விடாமல், சோர்வடைய விடாமல், இப்போது இன்றைக்கு என்ன செய்ய வேண்டும் என்று புரிய வைக்க வேண்டும். இரண்டு கைகளாலும் வட்டம் (க்ளாக்வைஸ், ஆன்டிக்ளாக்வைஸ்), நேர்கோடு (முன்னும்பின்னும்), குறுக்குக்கோடு (மேலும் கீழும்), அலைகள் (இடமிருந்து வலமிருந்து) இவை எல்லாம் தினமும் சிலமுறை பழகினால் போதும் மனம் நினைப்பதை, கை வரையும். மேலும் இடது கை வரையப் பழகுவது, வேடிக்கையாக¸ மூளை வளர்ச்சியை மேம்படுத்துவதாக இருக்கும்.

ஆனால், இந்த இத்தனையும், எல்லாப் பிரச்சினைகளும் பதின்பருவத்தில் வந்துபோவது நலம். எப்படி ஐந்து வயதுப் பிள்ளைக்கு எல்லா நோயும் வந்து போனால், நீடுழி வாழ்வார்கள் என்று சொல்கிறார்களோ, அப்படி. பிரச்சினை வரவரத்தான் வாழ்க்கை சுவாரஸ்யம். பிறகான வாழ்வில் எப்படியான நிலையையும் நின்று, நிதானித்து, தாங்கி, தாண்டி பிரமாதப்படுத்துவார்கள்.

சில பிள்ளைகளுக்கு வளர்ந்த பெரியவர்களுடன் ஒப்பீடு வந்துவிடும். தான் அவர்களளவு நேர்த்தியாகச் செய்ய முடியவில்லையே என்று, செயலற்று ஆகிவிடுவார்கள். அவர்கள் தன்னை இப்போதைய பெரியவர்களுடன் ஒப்பிடாமல் பெரியவர்களுடைய அதே வயதில் வைத்துப் பார்க்கக் கற்றுத் தர வேண்டும். வளர்ந்த பெரிய தலைவர்கள், சாதனையாளர்கள், சிந்தனைவாதிகள் தனது பதின் பருவத்தில் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்னவாக இருந்தார்கள் என்று, அவர்களது வாழ்க்கை வரலாறுகளை வாசிக்கும்போது இது புரிபட்டுவிடும்.

நமக்கு நமது பதின்பருவத்தில் என்னவெல்லாம் பிரச்சினைகள் வந்தது என்று பிள்ளைகளோடு பேச வேண்டும். அது எளிதல்ல. கொஞ்சம் கொஞ்சமாகச் செய்ய வேண்டும்.

மூன்று பதின்பருவங்களிலும் மற்றும் குழந்தை பிறந்ததிலிருந்தே கண்ணாடி என்பது மிக முக்கியமாகப் பயன்படுத்த வேண்டிய ஒன்று. மனிதர் கண்டுபிடித்ததிலேயே நெருப்பு, சக்கரத்திற்கு இணையாகக் கண்ணாடியும் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று.

முதலில் பிள்ளைகளின் பாத்ரூமில் அவர்கள் தன் உடம்பைப் பார்க்க, நேசிக்க, அறிய, உணர பெரிய கண்ணாடி இருக்க வேண்டும். அதைப் பற்றி எல்லாம் நம்மோடு பேசும்படியான, பகிரும்படியான நமக்கேயான பொழுதுகள் வேண்டும். அதனுள் வேறு யாருக்குமே அனுமதி கிடையாது.

ஆனால், இவை எல்லாம் தாண்டி ஓரிடம் இருக்கிறது் பிள்ளைகள் நமது நண்பர்களுக்கும் மேலான நண்பர்களாக நம்மைத் தாங்கும் இடம். நம் உடம்பிலிருந்து வந்த உயிர், இந்த உலகின் யாரையும்விட நம்மைப் புரிந்துகொள்வார்கள். அப்படியான பொழுதுகள் அவ்வளவு அருமையாக இருக்கும், வேறென்ன வேண்டும் இந்த உலகத்தில் நமக்கென்று தோன்றும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2025 வெளியிடப்பெற்றது.